செ.வெ.எண்: 863/2016 நாள்: 10.12.2016

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாகர்கோவில்.

**ந.க.எண்.ஒ5/103/2016**

## பத்திரிகைச்செய்தி

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், தேரேகால்புதூர் வருவாய் கிராமத்திற்குட்பட்ட, (தேரேகால்புதூர் ஊராட்சி பகுதிக்கு மட்டும்) அரசு தொடக்கப்பள்ளி கோதைகிராமத்தில் வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் மனுநீதித்திட்ட (இரண்டாம் கட்டம்) நிறைவு நாள் நிகழ்ச்சி, 14.12.2016 (புதன் கிழமை) அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

கோதைகிராமம் அரசு தொடக்கப்பள்ளியில் 16.11.2016 அன்று நடைபெற்ற மனுநீதி திட்ட முதல் கட்ட நிகழ்ச்சியின் போது பெறப்பட்ட மனுக்களுக்கான உரிய பதில்கள் இந்த இரண்டாம் கட்ட நிறைவு நாள் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும். மேலும் இந்த நிகழ்ச்சியில் துறைவாரியாக அரசு நலத்திட்ட விபரங்களும் பொது மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

எனவே, தேரேகால்புதூர் ஊராட்சிக்குட்பட்ட பொது மக்கள் அனைவரும் இந்த நல்ல வாய்ப்பினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக,
தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி),
கன்னியாகுமரி மாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கன்னியாகுமரி மாவட்டம்.